# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.003/2021/மா

ஆணை நாள். 03.03.2021

திரு. I.H. சேகர்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்.

பெருநகர மாநகராட்சி ஆணையாளர்
மண்டல அலுவலர், மண்டலம் –15.
செயற்பொறியாளர்,மண்டலம் –15.
உதவி செயற்பொறியாளர், மண்டலம் –15.
ஈஞ்சம்பாக்கம். – எதிர் மனுதாரர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி எண்.20, டாக்டர். நஞ்சுண்டராவ் சாலை, ஈஞ்சம்பாக்கம் என்ற முகவரியில் வசிக்கும் I.H. சேகர் அவர்களின் 9.3.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 003/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை.**

பெருநகர சென்னை மாநகராட்சி எண்.20, டாக்டர் நஞ்சுண்டராவ் சாலை, ஈஞ்சம்பாக்கம் என்ற முகவரியில் வசிக்கும் திரு I.H. சேகர் என்பவர், மண்டலம –15 பகுதி 44, வார்டு 196, சோளிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம் கிழக்கு கடற்கரைசாலை மற்றும் டாக்டர்

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.003/2021/மா

ஆணை நாள். 03.03.2021

திரு. I.H. சேகர்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்.

பெருநகர மாநகராட்சி ஆணையாளர்
மண்டல அலுவலர், மண்டலம் –15. – எதிர் மனுதாரர்கள்
செயற்பொறியாளர்,மண்டலம் –15.
உதவி செயற்பொறியாளர், மண்டலம் –15.
ஈஞ்சம்பாக்கம்.

பெருநகர சென்னை மாநகராட்சி எண்.20, டாக்டர். நஞ்சுண்டராவ் சாலை, ஈஞ்சம்பாக்கம் என்ற முகவரியில் வசிக்கும் I.H. சேகர் அவர்களின் 9.3.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 003/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை.**

பெருநகர சென்னை மாநகராட்சி எண்.20, டாக்டர் நஞ்சுண்டராவ் சாலை, ஈஞ்சம்பாக்கம் என்ற முகவரியில் வசிக்கும் திரு I.H. சேகர் என்பவர், மண்டலம –15 பகுதி 44, வார்டு 196, சோளிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம் கிழக்கு கடற்கரைசாலை மற்றும் டாக்டர்

நஞ்சுண்டராவ் சாலையில் 8 அடி வரையில் ஆக்கிரமிப்பு செய்து திரு. நாராயணமூர்த்தி மற்றும் அவரது மனைவி லட்சுமி ஆகியோர் மாநகரட்சியில் எந்தவிதமான அனுமதியும் பெறாமல் 6 கடைகள் மற்றும் கட்டிடம் கட்டியுள்ளனர் என தெரிவித்துள்ளார். எனவே சட்டத்திற்கு புறம்பாக மாநகராட்சி அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கடைகள் மற்றும் கட்டிடம் ஆகியவற்றை தகர்த்திட ஆணையிடக் கோரி இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரர் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம் –15, செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் டிவிசன் 196, மண்டலம் –15 ஆகியோர்கள் விசாரணை செய்யும் பொருட்டு 22.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தமது வாக்குமூலத்தில் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 15 வார்டு 196ல் ஈஞ்சம்பாக்கம் கிராமம் கடற்கரை சாலையில், திரு. நாராயணமூர்த்தி மற்றும் திருமதி லட்சுமி ஆகிய இருவரும் பிளான் இல்லாமல் கட்டிடம் கட்டியுள்ளனர். கடற்கரை சாலை – நஞ்சுண்டராவ் சாலையில் மேற்கண்ட கட்டிடத்திற்கு பக்கத்தில், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து 6 கடைகளை கட்டியுள்ளனர். மேற்கண்ட கட்டிடத்தை ஆய்வு செய்து சாலையில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுமாறும், ஆக்கிரமித்து கட்டப்பட்ட கடைகளை இடிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3) மண்டல அலுவலர், மண்டலம் –15, செயற்பொறியாளர், மண்டலம் 15 மற்றும் உதவி செயற்பொறியாளர், மண்டலம் 15 ஆகியோர்கள் கூட்டாக கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, பகுதி 44, வார்டு 196ல் சோளிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம், கிழக்கு கடற்கரை சாலை இணைப்பு சாலையான டாக்டர். நஞ்சுண்டராவ் சாலையில் சுமார் 8 அடி அகலத்திற்கு நாராயணமூர்த்தி மற்றும் திருமதி. லட்சுமி, ஆரோக்கியமேரி, சரோஜா ஆகிய மூவரும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரியவருகிறது. கிழக்கு கடற்கரை சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ள திருமதி. ம. சரோஜா ஆகியோரது கட்டிடத்தை ஆய்வுசெய்து அகற்றுமாறு நெடுஞ்சாலைத்துறைக்கு 19.02.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. டாக்டர். நஞ்சுண்டராவ் சாலையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள மூவரின்

இடத்தையும் வருவாய் துறை மூலம் அளவீடு செய்து ஆக்கிரமிப்பு விவரங்களை மாநகராட்சிக்கு அளிக்க வட்டாட்சியர், சோளிங்கநல்லூர் அவர்களுக்கு 19.02.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு மாநகராட்சி விதிகளின்படி 19.02.2021 அன்று தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்தி வருபவர்களுக்கு அளித்த உரிமத்தை ரத்து செய்ய தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை விதிகளுக்கு உட்பட்டு தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுத்திடுவோம் என தெரிவித்துள்ளனர்.

4)மேலும் மண்டல அலவலர் தமது 19.02.2021 நாளிட்ட அறிக்கையில் திரு I.H.சேகர் அளித்த புகாரின் அடிப்படையில் டாக்டர். நஞ்சுண்டராவ் சாலை ஆய்வு செய்யப்பட்டது. இச்சாலையானது ஈஞ்சம்பாக்கம் ஊராட்சியிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. 2011 டிசம்பர் மாதம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. அது நாள் முதல் சென்னை மாநகராட்சி பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட புகாரின் அடிப்படையில் இச்சாலையை இளநிலை பொறியாளர் கோட்டம் 196, உதவி செயற்பொறியாளர், ப–45, செயற்பொறியாளர் ம–15 மற்றும் மண்டல அலுவலர் / ம–15 அவர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. இச்சாலையில் சுமார் 8 அடி சாலையை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. ஆக்கிரமிப்பாளர்களின் விவரம் 1) திருமதி K. சரோஜா, 2) திரு. நாராயணமூர்த்தி (ம) லட்சுமி, 3) திருமதி. ஆரோக்கியமேரி ஆகிய மூவரும் வணிக பயன்பபட்டிற்காக பயன்படுத்துவதாக தெரியவந்தது. தற்பொழுது இச்சாலையின் அகலம் 6 மீ. முதல் 8 மீ. வரை மாறுபட்டு உள்ளதால் எல்லையை அளவீடு செய்து அறிக்கை அளிக்குமாறு சோளிங்கநல்லூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 19.02.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் கிழக்கு கடற்கரை ஆக்கிரமிப்பு உள்ளதாக தெரியவருகிறது. இச்சாலை நெடுஞ்சாலை துறை பராமரிப்பில் உள்ளதால் இதுகுறித்து உதவி கோட்ட பொறியாளர் நெடுஞ்சாலைத்துறைக்கு அச்சாலையில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 19.02.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் டாக்டர். நஞ்சுண்டராவ் சாலையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாநகராட்சி விதிகளின்படி தாக்கீது (Under Section 220 Read with Section 222 of CCMC Act of 1919 )

19.02.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது. அந்த தாக்கீதில் தாக்கீது வழங்கிய 7 நாட்களுக்குள் தாங்களாகவே சாலை ஆக்கிரமிப்பை அகற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறை மூலமும் ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்தி வருபவர்களுக்கு அளித்த உரிமத்தை ரத்து செய்ய தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேலும் வட்டாட்சியர் அவர்கள் அளவீடுகள் குறித்து அறிக்கை அளித்தபின்னர் தொடர் நடவடிக்கை எடுத்து, சென்னை மாநகராட்சி நகரமைப்பு சட்ட விதிகளின்படி ஆக்கிரமிப்பு அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

5)மனுதாரரின் முறையீட்டு மனு, மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் மண்டல அலுவலர், செயற்பொறியாளர்களின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள், அறிக்கைகள் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, பகுதி 44, வார்டு 196–ல் சோளிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம், கிழக்கு கடற்கரை சாலை மற்றும் இணைப்பு சாலையான டாக்டர். நஞ்சுண்டராவ் சாலையில், சுமார் 8 அடி அகலத்திற்கு திரு. நாராயணமூர்த்தி மற்றும் திருமதி. லட்சுமி ஆகிய இருவரும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பது புலனாகிறது. எனவே கிழக்கு கடற்கரை சாலைப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டிடத்தை அகற்றுமாறு நெடுஞ்சாலைத்துறைக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது எனவும், சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கும் மேற்கண்ட டாக்டர். நஞ்சுண்டராவ் சாலையினை ஆய்வு செய்து சாலையின் எல்லையை அளவீடு செய்திடுமாறு கோரப்பட்டுள்ளது எனவும், ஆக்கிரமிப்பு செய்துள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாநகராட்சி விதிகளின் படி 19.02.2021 அன்று தாக்கீது வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தினை ஏற்று ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்தி வருபவர்களுக்கு அளித்த உரிமத்தை ரத்து செய்ய தாக்கீது வழங்கி, இது குறித்து மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற விதிகளுக்கு உட்பட்டு விரைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு மார்ச்சு, திங்கள், 3 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு. I.H. சேகர்,
எண்.20, டாக்டர். நஞ்சுண்டராவ் சாலை,
ஈஞ்சம்பாக்கம், சென்னை – 600 115.
2) மண்டல அலுவலர், மண்டலம் –15
பெருநகர சென்னை மாநகராட்சி,
சோளிங்கநல்லூர் மண்டலம்.
எண். 120, ராஜீவ்காந்தி சாலை,
சோழிங்கநல்லூர், சென்னை – 600 119.
3) உதவி செயற்பொறியாளர், மண்டலம் –15,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சோளிங்கநல்லூர் மண்டலம்,
எண்.120, ராஜீவ்காந்தி சாலை,
சோளிங்கநல்லூர், சென்னை – 600 119.
4) உதவி பொறியாளர்,
மண்டலம் –15– பகுதி 196,
சென்னை பெருநகர மாநகராட்சி,
ஈஞ்சம்பாக்கம், சென்னை – 600 115.

நகல். முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்

இகோ/உதிரிகள்.